DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **சூரவள்ளி** |
| Husband Name | : | முத்துராஜ் |
| Village | : | செல்லப்பனேந்தல் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | House wife |
| Age | : | 28/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர். .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.06.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது செல்லப்பனேந்தலில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1, 2 ஐ தெரியும். அ.சா.1 , 2 கடம்பவள்ளி, அழகுநித்யா ஆகியோர் எனது சித்தி. வழக்கில் காயம்பட்ட மல்லிகா எனது அத்தை. வழக்கின் ஆஜர் எதிரி எனக்கு சித்தப்பா ஆவார். எதிரி அ.சா.1 கடம்பவள்ளியின் கணவர் ஆவார். அ.சா.1ம் எதிரியும் கருத்து வேறுபாடு காரணமாக தனித்தனியாக இருந்து வருகிறார்கள். அ.சா.1 அவரது தகப்பனார் வீட்டில் மாடியில் குடியிருந்து வருகிறார். கீழ் தளத்தில் அவரது அம்மா குடியிருந்து வருகிறார். கடந்த 23.06.2024 அன்று மதியம் 3.00 மணியளவில் எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கும் அ.சா.1 வீட்டில் வந்து பார்த்தோம். அ.சா.1 கடம்பவள்ளி என்பவருக்கு வலது கையிலும் அழகுநித்யா என்பவருக்கு வலது கை கட்டை விரலிலும் காயம் இருந்தது , நான் போய் பார்க்கும்போது மல்லிகா என்பவர் கீழே விழுந்துகிடந்தார். அவருக்கு தலையின் பின்பகுதியில் காயம் இருந்தது. நான் காயம்பட்ட மூவரையும் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். நான் காயம்பட்டவர்களிடம் காயம் குறித்து விசாரித்தபோது எதிரி கண்ணன்

வெட்டியதாக சொன்னார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையே கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்றால் சரிதான். விவகாரத்து கேட்டு எதிரி அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து அடிக்கடி தகராறு செய்தார் என்றால் சரிதான். விவாகரத்திற்கு தடையாக இருப்பது அ.சா.1 ன் அம்மா மல்லிகா தான் காரணம் என்று அவர் மீது கோபமாக இருந்தார் என்றால் சரிதான். நான் சம்பவம் நடக்கும்போது அந்த இடத்தில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கும் அ.சா.1, மற்றும் அவரது அம்மா மல்லிகாவிற்கும் எந்த வித கருத்து வேறுபாடும் இல்லை என்றால் சரிதான். அவர்கள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவத்தின்போது எனது சித்தியான அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ மற்றும் எனது அத்தை மல்லிகா என்பவரையும் எதிரி அருவாளால் வெட்டினார் என்றால் சரிதான். எதிரி வெட்டியதால் தான் எனது சித்திகளுக்கும் எனது அத்தைக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்ன நடந்தது என்று உடனடியாக என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு சொந்த ஊரே செல்லப்பனேந்தல் என்றால் சரிதான். எனது கணவர் ஊரும் அதே ஊர்தான். எனது கணவர் மதுரையில் வேலை பார்த்து வருகிறார். சௌந்திரபாண்டியன் வீடு கிழக்கு பார்த்த திசையில் உள்ளது. எனது வீடு புகார்தாரர் அ.சா.1 கடம்பவள்ளியின் வீட்டிற்கு பின்புறமாக வடக்கு பார்த்த வாசல் உள்ள வீடாகும். சத்தம் கேட்டு சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தேன் என்ன நடந்தது என்று என் சித்தியிடம் கேட்டேன் அதற்கு அவர் எங்களை கண்ணன் வெட்டியதாக என்னிடம் கூறினார். அதன்பின்பு நான் அவர்களை திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என்னை புகார்தாரர் கடம்பவள்ளியின் உடன் பிறந்த சித்தப்பா மகனை திருமணம் செய்து உள்ளேன். எதிரி சம்மந்தம் வழியாக துாரத்து சொந்தம் என்றால் சரிதான்.

நான், பிரபாகரன், நீலா மற்றும் கிராமத்தை சேர்ந்த 50 நபர்கள் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு சேர்த்தோம். சம்பவம் நடந்த காலகட்டத்தில் எதிரிக்கும் புகார்தாரருக்கும் விவாகரத்து வழக்கு குடும்பநல நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான் ஆனால் எந்த ஊரில் நடந்தது என்று எனக்கு தெரியாது. கடம்பவள்ளிதான் அந்த விவாகரத்து வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஏன் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியும். புகார்தாரர் கடம்பவள்ளிக்கும் திருப்புவனம் காவலர் ஆண்டிச்சாமி என்பவருக்கும் தவறான பழக்கம் இருந்த காரணத்தால் தான் அவருக்கு சாதகமாக புகார்தாரர் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். போலிசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

*/Sd./*Thiru.A.Pasumpon Shunmugiah,
**Chief Judicial Magistrate,**
**Sivagangai.**